பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

21 11 2025 7 15

செய்தி ஆசிரியர்;

வெள்ளிக்கிழமை காலை R. சிதம்பரநாதன்

ஆகாஷவாணி

செய்திகள்-வாசிப்பவர் - சுமித்ரா ரத்னம்

தலைப்புச் செய்திகள்

1. குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, செகந்தராபாதில் இந்திய கலைத் திருவிழாவை இன்று தொடங்கி வைக்கிறார்.

2. ஆஸ்திரேலியாவுடன் இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த இந்தியா உறுதிபூண்டுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

3. இஸ்ரேலுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தை விரைவில் தொடங்கப்படும் என்று மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

4. நாட்டில் கடந்த 11 ஆண்டுகளில் மீன் உற்பத்தி இரண்டு மடங்காக அதிகரித்துள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

5. இந்தியா ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் ஜோஷ்னா சின்னப்பா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, செகந்தராபாதில் இந்திய கலைத் திருவிழாவை இன்று தொடங்கி வைக்கிறார்.

அங்குள்ள குடியரசுத் தலைவர் ஓய்வு இல்லத்தில் நடைபெறும் இந்த கலைத் திருவிழாவில் குஜராத், மகாராஷ்டிரா, ராஜஸ்தான், கோவா, தாத்ரா -நாகர் ஹவேலி, டாமன் டையு ஆகிய மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் உணவுகள் மற்றும் கலை பாரம்பரியங்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

ஆஸ்திரேலியாவுடன் இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்த இந்தியா உறுதிபூண்டுள்ளதாக வெளியுறவுத் துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

புதுதில்லியில் ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் திருமதி பென்னி வேங்குடன் இரு தரப்பு பேச்சுவார்த்தைகளை அவர் மேற்கொண்டார்.

வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, கல்வி, உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து இந்தப் பேச்சுவார்த்தையின்போது ஆலோசிக்கப்பட்டதாக அவர் கூறியுள்ளார்.

இரு நாடுகளுக்கு இடையிலான வர்த்தகம் தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும், விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் குறித்த

பேச்சுவார்த்தைகள் விரைவில் நிறைவடையும் என்றும் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

இஸ்ரேலுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தொடர்பான பேச்சுவார்த்தை விரைவில் தொடங்கப்படும் என்று மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இஸ்ரேல் சென்றுள்ள அவர், நேற்று அந்நாட்டின் தொழில்துறையினர் மற்றும் தொழில் துறை அமைச்சர் திரு. நீர் பார்காத் தலைமையிலான குழுவுடனும் பேச்சு நடத்தினார்.

செயற்கை நுண்ணறிவு, நிதித் தொழில்நுட்பம், விவசாயம் உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்த அதிக வாய்ப்புகள் உள்ளதாக அவர் தெரிவித்தார்.

இஸ்ரேல் தொழில் துறையினர் இந்தியாவில் அதிக முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு பியூஷ் கோயல் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

வடகிழக்கு மாநிலங்களில் உள்நாட்டு நீர்வழித்தடங்கள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருவதாக மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. சர்பானந்தா சோனோவால் கூறியுள்ளார்.

குவஹாத்தியில் நடைபெற்ற வடகிழக்கு மாநிலங்களில் எண்ணெய் மற்றும் எரிவாயு மாநாட்டில் பேசிய அவர், இதன் மூலம் அசாமில் இருந்து பெட்ரோலியப் பொருட்கள் ஏற்றுமதி அதிகரிக்கும் என்று கூறினார்.

பிரம்மபுத்திரா மற்றும் பராக் நதிகளில் நீர் வழிப் போக்குவரத்தை அதிகரிப்பதன் மூலம் சரக்குப் போக்குவரத்துக்கான செலவுகள் குறையும் என்று அவர் தெரிவித்தார்.

திப்ருகரில் கட்டப்பட்டு வரும் மண்டல நீர்வழிப் போக்குவர்த்து மையத்தின் மூலம் அடுத்த சில ஆண்டுகளில் 5,000 மாணவர்களுக்கு கடல்சார் திறன்கள் மற்றும் சரக்குப் போக்குவரத்து குறித்து பயிற்சி அளிக்கப்படும் என்று திரு சர்பானந்த சோனேவால் கூறினார்.

<<<<>>>>

நாட்டின் தொழில் வளர்ச்சி மற்றும் அறிவியல் முன்னேற்றத்திற்கு புவி ஆய்வு நிறுவனம் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி இருப்பதாக சுரங்கத் துறை அமைச்சர் திரு கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.

ஜெய்ப்பூரில் அந்த நிறுவனத்தின் 175-வது ஆண்டு கொண்டாட்டங்களை நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

இதனையொட்டி நடைபெறும் இரண்டு நாள் கருத்தரங்கைத் தொடங்கி வைத்துப் பேசிய அவர், புவி ஆய்வில் மேலும் பல முன்னேற்றங்கள் எட்டப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

முக்கிய கனிமங்கள் தொடர்பான ஆய்வை விரிவுபடுத்துதல், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பங்கள் மூலம் வளர்ச்சியை அதிகரிக்க முடியும் என்று திரு கிஷன் ரெட்டி குறிப்பிட்டார்.

<<<<>>>>

உலக மீன்வள தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி நாடு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

புதுதில்லியில் நடைபெறும் இரண்டு நாட்கள் நடைபெறும் கருத்தரங்கில் மத்திய மீன்வளத்துறை அமைச்சர் திரு ராஜீவ் ரஞ்சன் சிங், இணையமைச்சர்கள் திரு எஸ்பி.சிங் பாகேல், திரு ஜார்ஜ் குரியன் ஆகியோர் பங்கேற்க உள்ளனர்.

மதிப்புக்கூட்டுதல், உள்கட்டமைப்புகளை வலுப்படுத்துதல், ஏற்றுமதியை அதிகரித்தல் உள்ளிட்டவை குறித்து இதில் ஆலோசிக்கப்பட உள்ளது.

இதனிடையே மத்திய மீன்வளத் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் நாட்டில் கடந்த 11 ஆண்டுகளில் மீன் உற்பத்தி இரண்டு மடங்காக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடல் சார் உணவுப் பொருள்களின் ஏற்றுமதியும், கடந்த ஆண்டு 11 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

நாட்டில் சரக்குப் போக்குவரத்துத் துறை விரைவாக வளர்ச்சி அடைந்து வருவதாக மத்திய திறன் மேம்பாட்டுத் துறை இணையமைச்சர் திரு ஜெயந்த் சௌத்ரி கூறியுள்ளார்.

ஹைதராபாத்தில் உள்ள தேசிய திறன் பயிற்சி நிறுவன வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள சரக்குப் போக்குவரத்து தொடர்பான சிறப்புப் பயிற்சி மையத்தை நேற்று திறந்து வைத்து அவர் பேசினார்.

தேசிய சரக்குப் போக்குவரத்துக் கொள்கை உள்பட மத்திய அரசு மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள் மூலம் இத்துறையில் வாய்ப்புகள் அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

அடுத்த பத்து ஆண்டுகளில் இத்துறையின் வளர்ச்சி அதிகரிக்கும் என்று திரு. ஜெயந்த் சௌத்ரி குறிப்பிட்டார்.

<<<<>>>>

அந்நியச் செலாவணி கையிருப்பு போதுமான அளவு உள்ளதாக ரிசர்வ் வங்கி கவர்னர் திரு சஞ்சய் மல்ஹோத்ரா கூறியுள்ளார்.

தில்லியில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், நிதி ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதே ரிசர்வ் வங்கியின் முதன்மையான பணி என்றார்.

வங்கிகள் தொடர்பான விதிகளை எளிமைப்படுத்த தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அவர் கூறினார்.

உலக அளவில் சிறப்பாக செயல்படும் 100 வங்கிகளின் பட்டியலில் இந்திய வங்கிகள் அதிக அளவில் இடம்பெறும் என்று திரு சஞ்சய் மல்ஹோத்ரா தெரிவித்தார்.

<<<<>>>>

இந்திய பெருங்கடல் பாதுகாப்பு, சம்பந்தப்பட்ட அனைத்து நாடுகளின் கூட்டுப் பொறுப்பு என்று தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு அஜீத் தோவல் கூறியுள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற கொழும்பு பாதுகாப்பு மாநாட்டு அமைப்பின் கூட்டத்தில் பேசிய அவர், இந்த அமைப்பில் இந்தியா, இலங்கை, மாலத்தீவு, மொரீஷியஸ் மற்றும் பங்களாதேஷ் நாடுகள் இடம்பெற்றுள்ளதை சுட்டிக் காட்டினார்.

கடல் சார் பாதுகாப்பு, பயங்கரவாத தடுப்பு, பேரிடர் மேலாண்மை ஆகியவை இந்த அமைப்பின் முக்கிய நோக்கங்கள் என்று கூறினார்.

பொருளாதாரத்தை மேம்படுத்துவதிலும் கடல்கள் முக்கிய பங்காற்றுவதாக திரு அஜித் தோவல் தெரிவித்தார்.

<<<<>>>>

இசை மற்றும் கலாச்சாரம் தொடர்பாக மேலும் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தமிழக ஆளுநர் திரு. ஆர்.என். ரவி கூறியுள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற இசை விழா ஒன்றில் பங்கேற்றுப் பேசிய அவர், மொழிகளை இணைப்பதில் இசை முக்கிய பங்காற்றுவதாகத் தெரிவித்தார்.

மேற்கத்திய கலாச்சாரத்தை தவிர்த்து, நமது பாரரம்பரிய கலாச்சாரத்தை பின்பற்ற வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

கலாச்சாரத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து வளர்ச்சியுடன் கூடிய பாரம்பரியம் என்ற தாரக மந்திரத்துடன் பிரதமர் திரு நரேந்திர மோடி செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.

கலாச்சார பாதுகாப்பில் சென்னை ஐஐடியின் முயற்சிகள் பாராட்டத்தக்கது என்றும் திரு ஆர்.என். ரவி தெரிவித்தார்.

<<<<>>>>

அந்தமான்-நிகோபார் தீவுகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கனமழை முதல் மிக கனமழை வரை பெய்யக் கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கேரளாவில் சில இடங்களில் அடுத்த மூன்று நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது.

மத்தியப்பிரதேசத்தின் சில பகுதிகளில் அடுத்த இரண்டு நாட்களுக்கு கடும் குளிர் நிலவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே தில்லியில் காற்றின் தரம் தொடர்ந்து மோசமான நிலையிலேயே உள்ளது.

நேற்று மாலை காற்றின் தரக் குறியீடு 374 ஆக பதிவானது.

<<<<>>>>

இந்தியா ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் ஜோஷ்னா சின்னப்பா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இந்தூரில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 11-4, 11-6, 11-3 என்ற செட் கணக்கில் ஸ்பெயினின் Sophia Meteos-ஐ வென்றார்.

மற்றொரு காலிறுதி ஆட்டத்தில் வென்று Anahat Singh-ம் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

---------------

மஸ்கட்டில் நடைபெற்று வரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியா 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவில் Manush Shah - Manav Thakkar இணையும் கலப்பு இரட்டையர் பிரிவில், Manush Shah - Diya Chitale இணையும் இப்பதக்கங்களைக் கைப்பற்றின.

------------

புவனேஸ்வரில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Sindhanth Banthia - Prajwal Dev இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை 6-0, 6-3 என்ற செட் கணக்கில் இந்தியாவின் Parth Agarwal - Udit Kamboj இணையை வென்றது.

----------------

தேசிய ஜூனியர் பேட்மிண்டன் சாம்பியன் போட்டி இடா நகரில் நேற்று தொடங்கியது.

5 நாட்கள் நடைபெறும் இப்போட்டியில் 32 மாநிலங்கள் மற்றும் யூனியன்பிரதேசங்களைச் சேர்ந்த 428 பேர் பங்கேற்றுள்ளனர்.

-----------------

ஜப்பானில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Rutuja Bhosale - இங்கிலாந்தின் Naiktha Bains இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

-------------

உலகக்கோப்பை இறுதி குத்துச்சண்டைப் போட்டியில் இந்தியா 9 தங்கம், 6 வெள்ளி, 5 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

<<<<The End>>>>